செ.வெ.எண்: 209 நாள்: 11.03.2020

**புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

---

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் (10.03.2020) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் போது பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

குறிப்பாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொது மக்களின் அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்ற வேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் செயலாற்றுவதுடன் அரசின் திட்டங்களை பொது மக்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து முழுமையாக தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமானது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கீழ் வேம்பு, புங்கை உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகள் ஊரக பகுதிகளில் நட்டு பராமரிக்கும் வகையில் வளர்க்கப்பட்டு வருவதை ஆய்வு செய்யப்பட்டது.

பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் பொது மக்களுக்கு தேவையான சான்றிதழ்களை விரைவாக வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொன்னமராவதி பேரூராட்சிக்கு உட்பட்ட அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதுடன், இம்மையத்தில் குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறை வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் உறுதி செய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதே போன்று பொன்னமராவதியில் உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி மற்றும் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியை பார்வையிட்டு மாணவிகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், சமையலறை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மாணவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் தொடர்ந்து முறையாக மேற்கொள்ளவும், உணவினை சுகாதாரமான முறையில் சமைத்து வழங்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பவானி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**